# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 56 — 1973 අප්‍රේල් 19 වැනි බ්‍රහස්පතින්ද — 1973.04.19

56 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 387 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 399 |


## பதவிகள் — வெற்றிடம்

### " ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்குவிதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.*

*3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்காக நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச்சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அர்சாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினுல் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினுலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

*(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

*(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு, நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்ருண்டாகும்.*

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.*

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினுல், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

### முக்கிய அறிவித்தல்

**ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.**

எல். டபிள்யூ. பி. பிரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழித்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவும் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனல் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

### அரச கரும மொழித் திணைக்களம்

#### மொழி பெயர்ப்பாளர் பதவி (இலக்குமொழி சிங்களம்)

அரச கரும மொழித் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளர் (இலக்குமொழி சிங்களம்) பதவியொன்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் பின்வரும் படிவ அமைவு பெருவளவாகி 10 மே 1973 அன்று அல்லது அதற்கு முன்னர் எனக்குக் கிடைத்தல் வேண்டும்.

2. வேதன அளவு.—

இப்பதவிக்குரிய திரட்டு வேதனம் ஆண்டொன்றுக்கு ரூபா 6,600—180 ம் 240 ம் 9,240 ரூபாவாகும். ஆண்டொன்றுக்கு 8,280 ரூபா எய்தப் பெறுமுன் வினைத்திறமை காண் தடைப்பரீட்சை உண்டு.

3. சேர்வு நியதிகள்.—

(i) பதவி நிரந்தரமானது. ஆனல் ஓய்வூதியமற்றதாகும். நியமிப்பு ஏற்பாட்டு நிதியத்தின் அடிப்படையிலானதாகும். இந்தப் பதவியில் நியமிக்கப்படுதல் மூன்று ஆண்டுகளைச் கொண்ட தகுதிகாண் நிலைக்காலத்தின் பின்னரேயாகும். இது 09.06.69 ஆந் திகதியிட்ட 765 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் (அ), (ஆ) பிரிவுகளின் தொடர்பிலானதாகும்.

(ii) தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர் குறுகிய காலத்திற்குள் பதவிக் கடமையைப் பொறுப்பேற்குமாறு வேண்டப்படுவர்.

(iii) நியமிப்புத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் பொ. க. சா. (சாதாரண நிலை) பரீட்சையில் தமிழ் மொழியில் சித்தியடைதல் வேண்டும்.

மு. கு.—பொ. க. சா. (சாதாரண நிலை) பரீட்சைத் தரத்திலோ அதற்கு மேற்பட்ட தரத்திலோ தமிழ் மொழியறிவு பெற்றிருத்தல் கூடுதலான தகைமையாகக் கணிக்கப்படும்.

(iv) கடமைகளாவன :—ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கும் சிங்களத்திலிருந்து ஆங்கிலத்திற்கும் வேண்டிய அறிவு பெற்றபின் சிங்களத்திலிருந்து தமிழுக்கும் தமிழிலிருந்து சிங்களத்திற்கும் மொழிபெயர்த்தல், பிற திணைக்களங்களிலிருந்து வரும் சிங்கள அல்லது தமிழ் மொழி பெயர்ப்புக்களை மீள் நோக்கல், ஏனைய வழிகளில் திணைக்களத்திற்கு உதவுதல்.

4. வேண்டப்படும் தகைமைகள்.—

விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமையுடையவர் என்பதற்கு தக்க சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) அவர் ஒழுக்க நலமும் உடல் நலமும் உடையவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) 10.05.1973 இல் 25 வயதுக்குக் குறையாததும் 50 ற்கு மேற்படாததுமான வயதுடையவராக இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையிலுள்ளோர்க்கு இவ்வயதெல்லைகள் அமைவுடையனவன்று)

(இ) (i) அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகமொன்றில் சிங்கள மொழியை ஒரு பாடமாகக் கொண்ட பட்டமும் தெளிந்த ஆங்கில மொழியறிவும் உடையவராகவிருத்தல் வேண்டும்; அல்லது

(ii) பட்டதாரித் தகை நிலை அறிவு கொண்ட சிங்கள எழுத்தாளராகவோ நூலாசிரியராகவோ இருப்பதுடன் தெளிந்த ஆங்கில மொழி அறிவுடைய அல்லது 10 வருட அனுபவமுடைய சிங்கள மொழி பெயர்ப்பாளராகவிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்துடன் பின்வருவனவற்றின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(i) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்.

(ii) அதியுயர் கல்விச் சான்றிதழ்.

(iii) அண்மையிற் பெற்ற மூன்று நற்சான்றிதழ்கள் (அரசாங்க சேவையிலுள்ளோர்க்கு இது அமைவுடையதன்று.)

மு. கு.—மேலே குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் திருப்பியனுப்பப்படமாட்டா.

6. விண்ணப்பமோ, விண்ணப்பஞ்சார் ஏதும் கடிதமோ அஞ்சல் வழித் தொலைந்துவிட்டதென்றோ தாமதமடைந்துவிட்டதென்றோ கூறப்படும் முறைப்பாடு எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இறுதி நாள் வரை விண்ணப்பத்தைத் தாழ்த்துவதால் விளையும் இடருக்கு விண்ணப்பகாரரே பொறுப்புடையவர். அரசாங்க சேவையிலும் யாக்கங்களின் சேவையிலுமுள்ள உத்தியோகத்தர்கள் அனுப்பும் விண்ணப்பங்களின் விடயத்தில் விண்ணப்பம் சம்பந்தப்பட்ட விண்ணப்பகாரரின் திணைக்களத் தலைவரினால் அல்லது யாக்கத் தலைவரினால் விதித்த காலத்திற்கு முன்னர் பெறப்பட்ட தாய்த் தாமதத்திற்கு தக்க சான்று காட்டி திணைக்களத் தலைவர் அல்லது யாக்கத் தலைவர் ஏற்றுக் கொண்டமையைச் சிபாரிசு செய்தால் மட்டுமே குறித்த நாளுக்குப் பிந்தி வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

7. விண்ணப்பங்கள் அல்லது அவை தொடர்பான ஏனையக்கடிதத் தொடர்புகள் அரச கரும மொழி அலுவல் ஆணையாளர், அ.பெ. 598, 22, நீத்வழி, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டுமேயன்றி திணைக்களஞ்சார் உத்தியோகத்தர் எவரினதும் தனி முகவரிக்கு அனுப்பப்படலாகாது.

8. விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை அறிவிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் கடிதம் கிடைக்கப்பெறுதோர் உடனே அரசகரும மொழி அலுவல்

ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். இதன் படி ஒழுகாத விண்ணப்பகாரர் விண்ணப்பந் தொடர்பான கோரிக்கையெதனை யுமிழந்தவராவர்.

9. அரசாங்க சேவையாளர் பொது நிபந்தனைகளை இவ்வர்த்த மானியின் பகுதி I, பிரிவு (IIஅ) இல் பார்க்க.

பீற்றர் பி. அபேசேகரா,
அரச கரும மொழி அலுவல் ஆணையாளர்.

அரசகரும மொழித் திணைக்களம்,
22, றீத் வழி,
கொழும்பு 7,
1973 ஆம் ஆண்டு ஏப்ரல் 7 ஆம் திகதி.

அரச கரும மொழித் திணைக்களம்

மொழி பெயர்ப்பாளர் (இலக்கு மொழி—சிங்களம்) பதவிக்கான மாதிரி விண்ணப்பப் படிவம்

மு. கு.—விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மொழி பெயர்ப்பாளர் (இலக்கு மொழி—சிங்களம்) பதவிக்கான விண்ணப்பம்." என எழுதி அதை பதிவுக் கடித மூலமாக அரசகரும மொழி அலுவல் ஆணை யாளருக்கு அனுப்புதல் வேண்டும்.)

1. முழுப்பெயர் :————.

2. முகவரி :————.

3. பிறந்த திகதியும் இடமும் :————.
(பிறப்புச் சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்)
1973 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதியில் வயது :—
ஆண்டு:———— மாதம்:———— திகதி :————

4. சாதியம் :————.

5. விண்ணப்பகாரர் விவாகமானவரா, விவாகமாகாதவரா :—.

6. (அ) கல்வி அல்லது தொழில் தகைமை அல்லது இரண் டும் :————.
(சான்றிதழ் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

(ஆ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்பவற்றைப் பாடமாகக் கொண்டு சித்தியெய்திய அதியுயர் பரீட்சைகள் :————.
சிங்களம் :————.
தமிழ் :————.
ஆங்கிலம் :————.

(இ) மொழிபெயர்ப்பு வேலையில் அனுபவம் இருந்தால் அதன் விவரங்களைச் குறிப்பிடவும் :————.

(ஈ) எழுத்துத் துறையில் அனுபவம் இருந்தால் அதன் விவ ரங்களையும் குறிப்பிடவும் :————.

7. (அ) பாடசாலையிலிருந்து விலகிய பின் செய்த தொழில் அல்லது பெற்ற அனுபவம் அல்லது இரண்டின் தொடர் பிலுமான விவரம் :————.

(ஆ) அரசாங்க சேவையிலிருந்தால் தற்பொழுது வகிக்கும் பதவி, பெறும் வருடாந்த வேதனம் ஆகியவற்றைக் குறிப் பிடவும்.

8. இதற்கு முன் எந்த அரசாங்க திணைக்களத்திலும் அல்லது அரசயாக்கத்திலும் சேவையிலிருந்திருந்தால் அதிலி ருந்து விலகிய காரணத்தைக் குறிப்பிடவும் .————.

9. ஏதாவது தண்டனைக்குரிய குற்றம் புரிந்திருந்தால் அல்லது நீதி மன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டிருந்தால் அக்குற்றமும் தண்டனையும் சம்பந்தமான விவரங்களைக் குறிப்பிடவும் :————.

10. நற்சான்றிதழ்கள் வழங்கியுள்ள மூவர் பெயர்களும் பதவி நிலைகளும் :————.
(1)
(2)
(3)

————
ஒப்பம்

திகதி :————.

4-477—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56

---

விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

II ஆந் தர நிறைகள் அளவுகள் பொறிவலர் பதவி

இத் திணைக்களத்தின் நிறைகள் அளவுகள் பகுதியில், II ஆந் தர நிறைகள் அளவுகள் பொறிவலர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்காட்டப்பட்டுள்ள படிவத்திற்கேற்ப தயாரிக்கப்படும் விண் ணப்பங்கள், விலைக் கட்டுப்பாட்டதிகாரியும் தர மேற்பார்வையா ளரும், நிறை அளவுப் பகுதி, விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், பார்க் வீதி, கொழும்பு-5, எனும் முகவரிக்கு 1973 மே மாதம் 15 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடிய தாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

குறிப்பு.—விண்ணப்பங்கள் அனுப்பப்படும் தபாலுறையின் இட துபக்க மூலையில் "II ஆந் தர நிறை அளவு பொறிவலர் பதவி" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

2. நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.—நியமனம் நிரந்தரமானது, நியமனம், முதலில் 3 வருட, தகுதிகாண் நிலை மையிலாகும். நியமனம் பெறுபவர் பணிசெய்வோர் ஏற்பாட்டு நிதி யத்திற்குப் பணம் செலுத்துமாறு வேண்டப்படுவர்.

3. சம்பள அளவுத்திட்டம்.—இப்பதவிக்கான சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு : முதல் 6 மாத காலத்துக்கு ஒன்று திரட் டிய அளவுத்திட்டம் நாளொன்றுக்கு ரூ. 8.00. அதன் பின்னர் ரூ. 2,640—15 × 60—ரூ. 3,540. முதல் 6 மாத காலத்துக்கு நாளாந்தம் (உத்தேசப்படி) ரூபா 2.30 வீதமும், அதன் பின்னர் ரூ. 750—13 × 42—ரூ. 1,296 வருடாந்தம்.

4. தகைமைகள்.—

i. அதி சிறந்த நடத்தை உள்ளவராகவும்.

ii. விண்ணப்பதாரி 1973 மே மாதம் 15 ந் திகதியன்று 21 வய துக்குக் குறையாதவராயும் 30 வயதுக்கு மேற்படாதவரா யுமிருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக்கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

iii. ஆறும் தரமாகுதல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

iv. துல்லிய வேலையிலீடுபட்ட பொருத்துநராக 3 வருட அனு பவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது நிறுக்கும், அளக்கும் கருவிகளைப் பழுதுபார்ப்பவராயிருந்திருத்தல் வேண்டும்.

v. எளிய விளக்கப்படங்களை வாசிக்கக்கூடியதாயிருத்தல் வேண் டும்.

vi. அனுமதிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தகுந்த II ஆந் தரப் பதவியில் 5 வருட அனுபவமாகுதல் கொண்டிருத்தல் வேண்டும்.

குறிப்பு.—பிரிட்டிஷ் சேவைப் பாசறையில் சேவை அனுபவம், மதிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்ற சேவை அனுபவமாக மதிக்கப்படும்.

5. அபேட்சகர் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப்பிர திகளல்ல) விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும்.

i. பிறப்பு சாட்சிப் பத்திரம்.

ii. 4 ஆம் பிரிவினுல் வேண்டப்படும் தகைமைகளைக் கொண்டுள் ளாரென்பதைக் காட்டுவதற்கான சாதனச் சான்று.

iii. சமீபத்தில் பெற்ற இரண்டு நற்சான்றிதழ்கள்.

6. அரசாங்க சேவையிலுள்ளவர்கள் அல்லது அரசாங்கக் கூட்டுத் தாபனத்தின் சேவையிலுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை தங் கள் திணைக்கள அல்லது கூட்டுத்தாபன தலைவர்கள் மூலம் அனுப்பு தல் வேண்டும். அவ்விண்ணப்பங்களில் திணைக்களத் தலைவர்கள் அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனத் தலைவர்கள் அவ்வாறு அந்த உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க இய லும் எனக் குறிப்பிடவேண்டும்.

இவ்வர்த்தமானியின் பகுதி I பிரிவு (IIஅ) இன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப்பதவி நியமனங்களுக் குரிய பொது நிபந்தனைகளை அபேட்சகர்கள் கவனிக்குமாறு கேட் டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஜீவன் சமரவிக்ரம,
விலைக்கட்டுப்பாட்டதிகாரி.

கொழும்பு-3,
1973, ஏப்பிரல் 4.

மாதிரி விண்ணப்பப் படிவம்

II ஆந் தர நிறைகள் அளவுகள் பொறிவலர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் :————.

2. முகவரி :————.

3. பிறந்த தேதி :————.

4. வயது (15.05.1973 இல் அன்று) :————.
(பிறப்புச் சாட்சிப் பத்திர பிரதியை இணைக்கவும்).

5. (அ) பரம்பரையாலா அல்லது பதிவு செய்யப்பட்டதனுலா இலங்கையர் ? :—

(ஆ) பதிவு செய்யப்பட்டதனுலெனின் பதிவின் விவரங்கள்:—

6. அபேட்சகரின் கல்வித் தகைமைகள் :————.

7. (அ) அனுபவம் :————

(ஆ) ஏனைய தகைமைகள் :————.

8. அபேட்சகர் பாடசாலையிலிருந்து விலகிய பின்னர் தொழில் பார்த்தவராயிருந்தால் நியமனத் திகதிகளையும் முடிவுத் திகதிகளையும் தருவதுடன், அபேட்சகர் எச்சமயத்திலாவது அரசாங்க சேவையிலிருந்தவராயிருந்தால் விரிவான விபரம் தரவும் :————.

9. சிங்களத்திலும் தமிழிலும் அல்லது சிங்களத்தில் அல்லது தமிழில் வாசிக்க, எழுத கதைக்கக் கூடிய திறமை :————.

10. அபேட்சகரைப் பற்றி அறிந்து கொள்ளக்கூடிய நற்சான்றிதழ்களைக் கொடுத்த இருவரினது பெயர்களும் முகவரியும் :—

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விவரங்கள் யாவும் உண்மையானவையும், சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விவரங்கள் ஏவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்பட்டதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————
அபேட்சகரின் கையொப்பம்.

திகதி :————.

4-460—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56.

---

தொழிற்றிணைக்களம்

கட்டட மேற்பார்வையாளர் பதவி

தொழிற்றிணைக்களத்தே, கட்டட மேற்பார்வையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பஞ்செய்வோர், இதன்கீழ்க் குறித்துக் காட்டப்பட்டுள்ளவகையிலே படிவங்களை அமைத்தெழுதி, "தொழில் ஆணையாளர், தொழிற் செயலகம், கொழும்பு-5" என்ற முகவரிக்கு 1973 ம் ஆண்டு மே மாதம் 5 ம் தேதியன்றே அதற்கு முன்னதாகவோ கிடைக்கத்தக்கதாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகள்.—இப் பதவி நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பள உரிமை அற்றதுமாகும். அரசாங்க சேவைச் சேமநிதிக்கு உதவுதொகை வழங்கப்படுதல் வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர், நியமனஞ் செய்யப்படும் தேதியில் நிரந்தரமும் இளைப்பாற்றுச் சம்பளவுரிமையுமுள்ள பதவியில் இருப்பவராயின், தொடர்ந்து இளைப்பாற்றுச் சம்பளவுரிமையுடையவராயிருப்பர்.

3. சம்பளம்.—இப் பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டம், ரூ. 3,060—60 × 9—ரூ. 3,600 ஆகும்.

(குறிப்பு : 01.10.69 க்கு முன்னதாக இப் பதவிக்கான சம்பள அளவுத்திட்டம் ரூ. 1,044—42 × 8—ரூ. 1,380 ஆக இருந்தது).

4. தேவையான தகைமைகள்.—

(அ) விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் தாம் சிறந்த குணநலமும் உடலுறுதியும் உடையவர் என்பதற்கும், 1973 ம் ஆண்டு மே மாதம் 5 ந் தேதியன்று 21 வயதுக்குக் குறைந்தவரல்லர் என்பதற்கும் 35 வயதுக்கு மேற்படாதவர் என்பதற்கும் தக்கசான்று காட்டுதல் வேண்டும். (ஏலவே அரசாங்க சேவையில் உள்ளோருக்கு வயதெல்லைபற்றிய வரையறை இயைபுடைத்தாகாது).

(ஆ) விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றிற் சித்தியெய்தியிருத்தல் வேண்டும் :—

(i) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை, அல்லது,

(ii) சிங்கள மொழியுடன்/தமிழ் மொழியுடன், எண் கணிதம்/அல்லது தூய கணிதம் அல்லது ஆரம்ப கணிதம் உட்பட ஆறு பாடங்களில் இரு தடவைகளுக்குமேல் தோற்றாது சித்தியெய்திய கல்விப் பொது (சாதாரண)த் தராதரப் பரீட்சை.

(இ) கனிட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றிலே கட்டட அமைப்புப் பற்றியதாய் 3 ஆண்டு நீட்சியுடைய மாலைக் காலப் பயிற்சி நெறி, அல்லது,

(ஈ) கனிட்ட தொழிநுட்பக் கல்லூரி ஒன்றிலே 3 ஆண்டு நீட்சியுடைய பகுதி நேரப் பயிற்சி நெறி, அல்லது,

(உ) ஒப்பான பிற தகைமைகள்.

5. விண்ணப்பகாரர், தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் படிகளை அனுப்பிவைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்.

(ஆ) கல்வித் தகைமைகள், தொழில்நுட்பத் தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்.

(இ) அண்மையிலே பெற்றுக்கொண்ட நல்லொழுக்கச் சான்றிதழ்கள் இரண்டு. (ஏலவே அரசாங்க சேவையில் உள்ளோருக்கு இது இயைபுடைத்தாகாது.)

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவரவர் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். விதிக்கப்பட்ட தேதிக்குப் பிந்திக் கிடைக்கப்பெறும் விண்ணப்பம் எதுவேனும், விதிக்கப்பட்ட தேதிக்கு முன்னதாக உரிய திணைக்களத் தலைவராற் பெற்றுக்கொள்ளப்பட்டு, தாமதமானமைக்குப் போதிய காரணங்காட்டி அதனை ஏற்றுக்கொள்ளுமாறு திணைக்களத் தலைவரால் விதந்துரைக்கப்பட்டாலன்றி, ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. விண்ணப்பங்களோ விண்ணப்பங்கள் தொடர்பான பிற கடிதங்களோ தொழில் ஆணையாளரின் முகவரிக்கு அனுப்பப்படுவதன்றி, இத்திணைக்களத்திலிருக்கும் எவ்வலுவலாளர் பெயர் குறித்தும் அனுப்பப்படுதலாகாது.

8. இச் செய்திமடலின் I ம் பகுதி, (II அ) ட் பிரிவில் வெளியிடப்பட்டிருப்பனவும் அரசாங்க சேவையிலுள்ள பதவி நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளையும் நோக்குமாறு வேண்டுகின்றேன்.

9. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. 5 ம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கு அமையாமல் அனுப்பப்படும் மூலச் சான்றிதழ்கள் திருப்பியளிக்கப்படமாட்டா.

டபிள்யு. எல். பி. த மெல்,
தொழில் ஆணையாளர்.

தொழிற்றிணைக்களம்,
கொழும்பு,
1973 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 5 ம் தேதி.

குறிப்பிட்ட விண்ணப்பப் படிவம்

கட்டட மேற்பார்வையாளர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் :————.
(தெளிவான எழுத்துக்களில்)
சொந்தப் பெயர் :————.
பிற பெயர்கள் :————.

2. முகவரி :————.

3. பிறந்த தேதி :————.
(பிறப்புச் சான்றிதழின் படி ஒன்று இணைக்கப்படுதல் வேண்டும்.)

4. 1973 ம் ஆண்டு மே மாதம் 5 ந் தேதியன்று வயது :————.
ஆண்டுகள் :......... மாதங்கள் :......... நாட்கள் :.........

5. பிறந்த இடம் :————.

(அ) விண்ணப்பகாரர் :————.

(ஆ) விண்ணப்பகாரரின் தந்தை :————.

(இ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பாட்டன் :————.

(ஈ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பூட்டன் :————.
விண்ணப்பகாரர் இலங்கையிற் பிறந்தவராயின் (அ) வுடன், (ஆ) வோ, அல்லது (இ), (ஈ) ஆகிய இரண்டுமோ நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்ப காரர் இலங்கையிற் பிறந்திராதவராயின், (அ) வுடன், (ஆ), (இ) ஆகிய இரண்டுமோ, அல்லது (இ) (ஈ) ஆகிய இரண்டுமோ நிரப்பப்படுதல் வேண்டும்.

6. விண்ணப்பகாரர் திருமணஞ் செய்தவரோ, செய்யாதவரோ ? :

7. கல்வித் தகைமைகள் :————.

8. தொழில்நுட்பத் தகைமைகள் :————.

9. பாடசாலையை அல்லது கல்லூரியை விட்டு விலகியபின், எங்கெனினும் வேலைக்கமர்ந்திருந்தால் அதனைக் குறிப்பிடுக : ————.

10. விண்ணப்பகாரருக்கு, சிறப்பியல் உரிமைக்கோரிக்கைகள், தகைமைகள், பயிற்சி அல்லது அனுபவம் இருப்பின், அவற்றைக் குறிப்பிடுக :————.

11. விண்ணப்பகாரரின் திறமை, நல்லொழுக்கம் ஆகியவைபற்றி விசாரித்தறிவதற்கு, உயர் நிலையிலுள்ள இருவரின் பெயரும் முகவரியும் தருக :————.

12. சான்றிதழ் வழங்கியோர் பெயரும் முகவரியும் :————.

இவ் விண்ணப்பத்தில் யான் கொடுத்துள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை என்றும் திட்பமானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இவ் விவரங்களில் எவையேனும் உண்மைற்றவையென யான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னதாகக் கண்டுபிடிக்கப்பட்டால், தகுதியற்றவனுக்கப்படுவேன் எனவும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றிச் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் யான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

தேதி :————.

4-456—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56.

---

இல. சுபோ/ஆய/20.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம்

பரிசோதனை அலுவலர் பதவிகள்

ஸ்ரீ லங்கா குடியரசின் 1973 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ந் திகதிய 45 ம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பத்தின் முடிவுத் தேதி மேலும் 1973 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ந் திகதி வரைக்கும் (உட்பட) நீடிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்கூறிய வர்த்தமானி அறிக்கையில் குறிக்கப்பட்ட பாடங்களைக் கொண்ட பட்டப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளோரது விண்ணப்பங்கள் பெறுபேறுகளை எதிர்பார்த்து ஏற்றுக்கொள்ளப்படும். அவ்வாறன விண்ணப்பதாரர் வேண்டப்படும் தகைமைகளைப் பெற்றவுடன் சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களப் பணிப்பாளருக்குப் பதிவுத் தபால் மூலம் அறிவித்தல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுவோரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

கலாநிதி ஈ. ஜெயநெத்தி,
பணிப்பாளர்.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம்,
159, தர்மபால மாவத்தை,
கொழும்பு-7,
1973 ம் ஆ ஏப்பிறல் மீ 7 ந உ.

4-443—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56.

---

## இலங்கைத் தத்துவக் கணக்காளர் கழகப் பரீட்சைகளுக்குப் பயிற்சியளிப்பதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி வசதி அளித்தல்

இலங்கை தத்துவக் கணக்காளர் கழகத்தில் பயிற்சியளிப்பதற்கு இவ்வறிவித்தலின் 2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்களும் தமது நியமனங்களில் உறுதிப்படுத்தப் பட்டவருமான அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவழைக்கப்படுகின்றன. 1973 ஜுலை 1 ஆந் தேதியில் பயிற்சி நெறி தொடங்குகின்றது.

2. **தேவைப்படும் தகைமைகள்.**—(அ) வயது—1973 ஜுலை 1 ஆம் தேதியில் 40 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்வித் தகைமைகள்.**—பின்வரும் கல்வித் தகைமைகளில் ஒன்றையேனும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

(i) கழகத்தினவை அங்கீகரித்த பல்கலைக்கழகமொன்றின் பட்டக் கல்வி ;

(ii) இலங்கை உயர் பாடசாலைத் தராதரப் பத்திரம் ;

(iii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல் டிப்ளோமா;

(iv) இலங்கை அல்லது இலண்டன் பல்கலைக்கழக க.பொ.த. பரீட்சையில் (உயர்தரம்) இரு தடவைகளுக்கு மேற்படாமல் 4 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அந்நான்கு பாடங்களில் கணிதம் ஒரு பாடமாக இருத்தல் வேண்டும். கணிதம் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் நான்கு பாடங்களில் ஒரு பாடமாக இல்லாவிட்டால், க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் கணிதத்தில் அல்லது எண்கணிதத்தில் அல்லது வர்த்தக எண் கணிதத்தில் திறமைச் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

(இ) அரசாங்கத்தின் கீழ் சேவை—

(i) அரசாங்கக் கணக்காளர் சேவையில் அல்லது கணக்குப் பரிசோதனைச் சேவையில் ஓர் உறுப்பினராதல் வேண்டும்; அல்லது

(ii) 1973 ஜுலை 1 ஆந் தேதியில் குறைந்தது ஐந்தாண்டுச் சேவையுடன் கழகத்தினவை அங்கீகரித்த பல்கலைக் கழகத்துப் பட்டதாரியாயிருத்தல் வேண்டும்; அல்லது

(iii) 1973 ஜுலை 1 ஆந் தேதியில் குறைந்தது ஐந்தாண்டுச் சேவையுடன் இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியல் டிப்புளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

கணக்கு வேலைகளில், அத்துடன்/அல்லது கணக்குப் பரிசோதனை வேலையில் முன் அனுபவம் உள்ளோர்க்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

3. தெரிவு முறை.—முறையாக நியமிக்கப்பட்ட தெரிவுச் சபையொன்றினல் நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படும். நேர்முகப் பரீட்சையின் இடமும் நேரமும் விண்ணப்பிப்போர்க்கு அறிவிக்கப்படும்.

4. தெரிவு செய்யப்படவுள்ள பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை.—கிடைக்கத்தக்கதாகவுள்ள வசதிக்கேற்ப, 3 பரீட்சார்த்திகளுக்கு மேற்படாமல் பயிற்சி பெறத் தெரிவு செய்யப்படுவர்.

5. பயிற்சி.—இலங்கைத் தத்துவக் கணக்காளர் கழகத்தால் பொருந்திப் பயிலுவதற்கு ஒழுங்கு செய்யப்படும்.

பொருந்திய பயிலும் காலம் பின்வருமாறு :—

(i) கழகத்தினவை அங்கீகரித்த பல்கலைக் கழகப் பட்டதாரிகள் விடயத்தில் 3 ஆண்டுகள்;

(ii) பிற விடயங்கள் எவற்றிலும்—4 ஆண்டுகள்.

6. பயிற்சியை வெற்றிகரமாக முடித்த, கணக்குப் பரிசோதனைச் சேவையிற் சேர விருப்பம் தெரிவித்த உத்தியோகத்தர்களைத் தவிர்ந்த மற்றவர்கள் கணக்காளர் சேவையின் 4 ஆம் வகுப்பிற் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

7. **புலமைப் பரிசில் நிபந்தனைகள்.**—(அ) புலமைப் பரிசில் பெறத் தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி ஒருவர், பயிற்சி நெறியை வெற்றிகரமாக முடித்த பின்னர் பத்து ஆண்டு காலத்துக்கு அரசாங்கக் கணக்காளர் சேவையில் அல்லது கணக்குப் பரிசோதனைச் சேவையில் (அவ்வாறு வேண்டப்பட்டால்) சேவை செய்ய ஒப்புக்கொண்டு ஓர் உடன்படிக்கை செய்யுமாறு வேண்டப்படுவர்.

(ஆ) கழகத்திற்குக் கட்ட வேண்டிய படிப்புக்குக் கட்டணம், பரீட்சைக் கட்டணம் போதனை நெறிச் செலவுகள், கடிதத் தொடர்பு நெறிச் செலவுகள் ஆகியன அரசாங்கத்தினல் செலுத்தப்படும். பயிற்சியோடு தொடர்பான பிற இடைநேர் செலவுகளைப்

பரீட்சார்த்தியே பொறுத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திக்கு ஈராண்டு முழு வேதன விடுதலை கொடுக்கப்படும். இலங்கைத் தத்துவக் கணக்காளர் கழகத்தின் இடைநிலைப் பரீட்சையை, குறித்த இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் வெற்றிகரமாக முடிக்கும் பரீட்சார்த்திகளுக்கு, அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதியின் தற்றுணிபின் பேரில் மேலுமொரு காலத்திற்கு முழுவேதன விடுதலை கொடுக்கப்படும்.

(இ) பின்வரும் நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றின் கீழ் அல்லது பலவற்றின் கீழ் புலமைப் பரிசில் நிறுத்தப்படுதற்கேதுவாகும் :—

(i) ஒரு பரீட்சார்த்தி, குறித்த கழகத்தினால் நடத்தப்படும் தொடக்க விரிவுரை நெறிகளையும் பயிற்சிகளையும் தத்துவக் கணக்காளர் கழக மன்றத்தின் திருப்திக்கேற்ப முடிக்கத் தவறினால் ; அத்தகைய சந்தர்ப்பத்தில் பொருந்திப் பயில அனுமதிக்கப்படமாட்டார்.

(ii) இலங்கைத் தத்துவக் கணக்காளர் கழகப் பிரமாணங்களின் படி பொருந்திப் பயிலும் காலம் முடிவடைகையில் ;

(iii) குறித்த பரீட்சார்த்தி, இலங்கைத் தத்துவக் கணக்காளர் கழகப் பிரமாணங்களின்படி இடைக்காலப் பரீட்சை எடுக்கத் தகுதிபெற்ற ஓராண்டுக் காலத்துள் அப்பரீட்சையை வெற்றிகரமாய் முடிக்கத் தவறினால் ;

(iv) தத்துவக் கணக்காளர் கழக (இல. 2), பிரமாணங்கள் 1960 என்பதன் 28 ஆம் பிரமாண ஏற்பாடுகளின் கீழ் குறித்த கழகம் பொருந்திப் பயிலும் காலத்தை நிறுத்தினால் ;

(v) குறித்த கழகத்தின் 15 (2) ஆம் பிரமாணத்தின் பிரகாரம் குறித்த பரீட்சார்த்தி திருப்திகரமாகக் காணப்படாவிடின்,

(ஈ) (i) ஆம் பிரிவின்கீழ் ஒரு பரீட்சார்த்தி பொருந்திப் பயில அனுமதிக்கப்படாவிடின் அல்லது மேலே (iii), (iv), (v) ஆம் பிரிவின் கீழ் ஒரு பரீட்சார்த்தியின் பொருந்திப்பயிலல் நெறி நிறுத்தப்பட்டால், அன்னாரின் புலமைப் பரிசில் நிராகரிக்கப்படும்; அவரின் புலமைப் பரிசில் நிராகரிக்கப்பட்ட தேதிவரை அவரது பயிற்சி காரணமாய் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவுகள் யாவும் பயிற்சிக் காலத்தில் அவருக்குச் செலுத்தப்பட்ட சம்பளமும் படிகளும் அவரால் அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுக்கப்படல் வேண்டும்.

8. விண்ணப்பங்கள் யாவும் இத்துடன் இணைத்துள்ள படிவத்தில் முற்றாக நிரப்பப்பட்டு, இணைந்த சேவைகள் பணிப்பாளர், "சி" கட்டு, ரொறிங்ரன் சதுக்கம், கொழும்பு 7 என்னும் முகவரியை மே மாதம் 21 ஆந் தேதியன்றோ அதன் முன்னரோ சென்றடையுமாறு அனுப்பப்படல் வேண்டும்.

9. விண்ணப்பகாரர் சேவை செய்யுந் திணைக்களத் தலைவர்க்கூடாக எல்லா விண்ணப்பங்களும் அனுப்பப்படல் வேண்டும். எனினும் விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதிக்கு நேராக அனுப்பப்படல் வேண்டும்.

10. எல்லா விண்ணப்பங்களையும் பெற்றுக்கொண்டமை ஒப்புக்கொள்ளப்படும். எந்த விண்ணப்பக்காரரும் முடிவுத் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் ஒப்புக்கோடல் பெறுவிடின், அது பற்றி அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதிக்கு உடனடியாக அறிவித்தல்வேண்டும்.

பி. எச். சிறிவர்தன,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உண்ணாட்டு அலுவல்கள் அமைச்சின்
பதில் நிரந்தரச் செயலாளரும் பதில்
அரசாங்க நிருவாகப் பணிப்பாளர்
அதிபதியும்.

அரசாங்க நிருவாக திணைக்களம்,
" சி " கட்டு, ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7.
1973 ஏப்பிரல் 9 ஆந் தேதி.

7 ம் பந்தியில் கூறப்பட்ட விண்ணப்பப் படிவம்

**இலங்கைத் தத்துவக் கணக்காளர் கழகப் பரீட்சைகளுக்குப் பயிற்சியளிப்பதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி வசதியளித்தல்**

1. முழுப் பெயர் :————.
 (அ) சொந்தப் பெயர் :————.
 (ஆ) பிற பெயர்கள் ————.
2. அஞ்சல் முகவரி :————.
3. பிறந்த தேதி :————.
4. கல்வித் தகைமைகள் :————.
5. நியமனத்தின் விவரங்கள் :————.
 (அ) திணைக்களம் :————.
 (ஆ) தற்போதைய பதவி :————.
 (இ) நிரந்தர சேவைக்கு நியமனம் பெற்ற முதற் தேதி :—.
 (ஈ) வகித்த பிற பதவிகள் :————.
 (உ) தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா:—
 (ஊ) நிரந்தர சேவைக் காலம் :————.
6. ஏதாவது விசேட கோரிக்கைகளின் விவரங்கள் :————.

விண்ணப்பதாரியின் ஒப்பம்.

திகதி :————.

திணைக்களத் தலைவரின் சிபாரிசு

(விண்ணப்பங்களை அனுப்பும் போது திணைக்களத் தலைவர்கள் 3 ம் 5 ம் கூடுகளிற் கொடுக்கப்பட்ட விவரங்கள் சரியென்று உறுதிப்படுத்தி, விண்ணப்பதாரியின் வேலையும் நடத்தையும் திருத்திகரமானதா என்றும் உரைத்தல் வேண்டும்)

————,
திணைக்கத் தலைவரின் ஒப்பமும்,
பதவிப் பெயரும்.

திகதி :————.

4—503—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56.

---

இல. வெ. மு. 2/243

**கல்வி அமைச்சு**

இத்தாலிய அரசாங்கப் புலமைப் பரிசில்கள், 1973

இத்தாலிய அரசாங்கத்தால் 1973/74 ஆம் கழகவாண்டின் போது வழங்கப்படும் புலமைப் பரிசில்களை அளித்தற்பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்புலமைப் பரிசில்கள் பட்டப்பின் கற்கைகளுக்காகும்.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1. புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர், 16.5.60 ஆந் திகதிய 514 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்று நிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு 2. சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ஆம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

குறிப்பு 3. ஒவ்வொரு விண்ண்ப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. கால எல்லை.—புலமைப் பரிசில்கள் சாதாரணமாக ஒரு வருட கால அளவினதாகும்.

எனினும், துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு இத்தாலிய அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு

பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. *தகவுத்திறன்.*—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(i) ஸ்ரீ லங்கா பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1973.8.1 அன்று 35 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) ஆங்கிலத்தில் உயர்ந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(iv) விரும்பும் கற்கை நெறிக்குப் பொருத்தமுடைய, ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் இரண்டாம் வகுப்புப் பட்டமேனும் பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு 1.—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.8.1973 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

குறிப்பு 2.—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையாராகார். படிவத்தின் 15 (ஈ) ஆம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. *அளிப்பு நிபந்தனைகள்.*—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) இத்தாலிக்குப் போய்த் திரும்புதற்கான ஆகாய விமான மூல சுற்றுப்பயணத்தார் வகுப்புச் செலவு.

(ஆ) மாதாந்தப் படியாக 80,000 லயர் (lire)

(இ) சமூகக் காப்புறுதி

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட ஏனைய செலவுகள்.

குறிப்பு.—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. *நேர்முகப் பரீட்சை*

தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்விதச் செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப் படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

6. *உடன்படிக்கை*

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், இத்தாலிக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) ஸ்ரீ லங்கா குடியரசின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக ஸ்ரீ லங்கா குடியரசுக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்த வரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) ஸ்ரீ லங்கா குடியரசுக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. *வைத்தியப் பரீட்சை*

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இத்தாலியில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்வதற்கு வேண்டிய உடல்நலன், மன நலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால், அரசாங்க உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில், கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையாராகார். ஏனையோரைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து திரும்பியதும் அவர்களுக்கு உத்தியோகம் அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கவில்லை.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னாராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்டபின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக்கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்து கொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வனுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள் 1973.05.04 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்பட்டு தற்கான உரித்தை இழப்பார்.

காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2.
1973.04.10.

4–519—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56

**ஸ்ரீ லங்கா அரச வியாபார (புடவை) கூட்டுத்தாபனம் சலு சல ரகக் கட்டுப்பாட்டாளர் பதவி (புடவை)**

மேற்கூறப்பட்ட பதவிக்கு ஸ்ரீ லங்கா பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்**

**கல்வி.**—இரசாயனம் அல்லது பௌதிகம் அல்லது [illegible] கணிதம் உட்பட விஞ்ஞானவியல் மணி பட்டம்; அல்லது விண்ணப்பதாரிகள் பின்வரும் உயர்தொழில் தகைமைகளுள் ஒன்றை அல்லது பலவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) இங்கிலாந்தின் புடவை நிலையத்தின் பங்காளியாயிருத்தல் வேண்டும்; அல்லது

(ஆ) மூன்று வருட அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் புடவை மணி பட்டம் பெற்றவராயிருத்தல் வேண்டும்; அல்லது

(இ) 6 வருட அனுபவத்துடன் வி. ஜே. ரி. ஐ. அல்லது அதற்குச் சமமான டிப்ளோம பட்டத்தைப் பெற்றவராயிருத்தல் வேண்டும்;

(ஈ) புடவை சந்தைப்படுத்துதலில் அறிவையும் அனுபவத்தையும் அல்லது இரண்டிலொன்றைக் கொண்டிருத்தல் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

**வயது.**—1973 மே 10 ம் திகதியின் போது 23 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்.**—ரூபா 900—7.50—ரூபா 1,250 மாதமொன்றிற்கு (எல்லாம் உட்பட ) மேலதிகத் தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டுள்ளவர்கள் மேற்கூறப்பட்ட சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான இடத்தில் வைக்கப்படுவார்கள்.

விண்ணப்பதாரிகள் தமது வயது, கல்வி, உயர் தொழில் தகைமைகள், பாடசாலையை விட்டு விலகியதிலிருந்து வகித்த தொழில் அனுபவம் ஆகியவற்றைப் பற்றிய முழு விபரங்களையும் தருவதுடன் சான்றிதழ்கள், நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகளையும் (மூலப் பிரதிகளல்ல) மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஏற்கனவே அரசாங்க சேவை, அரச கூட்டுத்தாபனங்கள் அல்லது சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை முறையே தத்தம் தலைவர்களுக்கூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் 1956 இன் 36 ஆம் இல. அரச கருமமொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் விதிகளுக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 1973 மே 10 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். 1973 ஜனவரி 12 ம் திகதி ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின்படி ஏற்கெனவே விண்ணப்பித்தவர்கள் மறுமுறை விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

தலைவர்.

ஸ்ரீ லங்கா அரச வியாபார (புடவை)
கூட்டுத்தாபனம்—சலுசல,
93, ஜாவத்த ரோட்,
கொழும்பு 5.

4-511—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56

---

**அம்பாறை மாவட்டத்தில் கருங்கொடித்தீவு பிறப்பு, இறப்புப் பதிவாளர் பதவி**

மேற்கூறப்பட்ட பதவிக்கு கருங்கொடித் தீவுப் பிறப்பு, இறப்புப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலமாக வசிப்பவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள், ஆண்/பெண் இருபாலாரும், விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களை பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், குறிப்பிட்ட பகுதியை உள்ளடக்கும் காரியாதிகாரியின் அலுவலகத்திலும், கிராம சேவையாளர் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும் கிராம நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிசு நிலையம், சனசமூக நிலையங்களிலும் இந்தப் பிரிவுக்குள் இருக்கும் ஏனைய பகிரங்க நிலையங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிற அறிவித்தல்களில் அடங்கி உள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்பப்படுவதோடு 1973 ம் ஆண்டு மே மாதம் 21 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

சோமசிறி முனசிங்க,
மேலதிக மாவட்ட பதிவாளர்,
மாவட்ட பதிவாளருக்காக.

மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
அம்பாறை,
73.04.05.

4-482—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56

---

**திருக்கோணமலை மாவட்டத்தின் குடாக்கரைக் கிராமப் பகுதியில் பிறப்பு இறப்புப் பதிவாளர் பதவி**

மேற்கூறப்பட்ட பதவிக்கு குடாக்கரைக் கிராமப் பிறப்பு, இறப்புப் பதிவுப் பகுதிக்குள் நிரந்தரமாக வசிக்கும் ஆண்/பெண் இருபாலரிடம் அல்லது அவ்விடத்தை வாசஸ்தலமாகக் கொண்டு அவ்விடம் குடியேறி, அப்பகுதிக்குள் போதிய நலனும் செல்வாக்குமுடைய நபர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் முடிவடையும் தினத்தன்று விண்ணப்பக்காரர்கள் 21 வயதிற்குக் குறையாதவர்களாகவிருத்தல் வேண்டும். ஏற்கனவே, நிரந்தர அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பகாரர்களுக்கு இவ் வயதுக் கட்டுப்பாடு அமைவுறாது.

2. கல்வி, தகைமை சம்பந்தமான மேலதிக விபரங்களை இக்காரியாலயத்தில் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களிலிருந்து அல்லது அப்பகுதிக்குள் இருக்கும் பொது இடங்கள், அலுவலகங்கள், அதாவது பகுதி அரசிறை உத்தியோகத்தரின் அலுவலகம், கிராம சேவையாளரின் அலுவலகம், உள்ளூராட்சிச் சபையினரின் அலுவலகங்கள், கிராமக்கோடுகள், அஞ்சல் அலுவலகங்கள், பொலிசு நிலையங்கள், சனசமூக நிலையங்கள், பொதுச் சந்தைகள், கூட்டுறவுச் சங்கக் கடைகள் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. இவ்வலுவலகத்திலிருந்து பெறக்கூடிய விதித்த படிவத்தில் எல்லா விண்ணப்பங்களையும் தயாரித்து, 1973 ம் ஆடு மே (வைகாசி) மாதம் 24 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும்.

திஸ்ஸ தேவேந்திரா,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
திருக்கோணமலை,
1973 ம் ஆடு ஏப்ரல் (சித்திரை) மீ 5 ந் உ.

4-469—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56

**மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆறுமுகத்தான்குடியிருப்பு பகுதியின் பிறப்பு, இறப்புப் பதிவாளருக்கும் ஏருவூர் கோற்றளைப் பற்றுப் பகுதியின் (பொது) விவாகப் பதிவாளருக்குமான பதவி**

மேற்கூறபட்ட பதவிக்கு ஆறுமுகத்தான்குடியிருப்பு பிறப்பு, இறப்புப் பதிவுப் பகுதிக்குள் நிரந்தரமாக வசிக்கும் ஆண், பெண் இருபாலரிடம் அல்லது அவ்விடத்தை வாசஸ்தலமாகக் கொண்டு அவ்விடம் குடியேறி, அப்பகுதிக்குள் போதிய நலனும் செல்வாக்குமுடைய நபர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் முடிவடையும் தினத்தன்று விண்ணப்பகாரர்கள் 21 வயதிற்குக் குறையாதவர்களாக விருத்தல் வேண்டும். ஏற்கனவே, நிரந்தர அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பகாரர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு அமைவுறுது.

2. கல்வி, தகைமை சம்பந்தமான மேலதிக விபரங்களை இக்காரியாலயத்தில் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிக்கும் அறிவித்தல்களிலிருந்து அல்லது அப்பகுதிக்குள் இருக்கும் பொது இடங்கள், அலுவலகங்கள் அதாவது, பகுதி அரசிறை உத்தியோகத்தரின் அலுவலகம், கிராம சேவையாளரின் அலுவலகம், உள்ளூராட்சிச் சபையினரின் அலுவலகங்கள், கிராமக் கோடுகள், அஞ்சல் அலுவலகங்கள் பொலிசு நிலையங்கள், சனசமூக நிலையங்கள், பொதுச் சந்தைகள், கூட்டுறவுச் சங்கக் கடைகள் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

3. இவ்வலுவலகத்திலிருந்து பெறக்கூடிய விதித்த படிவத்தில் எல்லா விண்ணப்பங்களையும் தயாரித்து, 1973.05.15 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும்.

ஆர். பீ. வீரகோன்,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
மட்டக்களப்பு,
1973 ஏப்பிரல் 3 ந் திகதி

4–458—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56

---

**தெல்லிப்பளை, மயிலிட்டி ஆகிய இரு கிராமச் சபைப் பிரதேசங்களுக்கு சடுதிமரண விசாரணையாளர்கள் பதவி**

தெல்லிப்பளை, மயிலிட்டி ஆகிய இரு கிராமச் சபைப் பிரதேசங்கள் ஒவ்வொன்றுக்கும் சடுதிமரண விசாரணையாளர்கள் ஒவ்வொருவரை நியமிக்கவிருப்பதனல் அவ்வவ் கிராமச் சபைப் பிரதேசங்களுக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து மாத்திரம் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

2. அரசாங்க, கூட்டுத்தாபன, மற்றும் உள்ளூராட்சிமன்ற ஊழியர்களினதும் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளினதும் 30.4.73 ம் திகதியன்று 30 வயதுக்குக் குறைந்தவர்களிடமிருந்தும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

3. சகல விண்ணப்பதாரர்களும் கீழ்க்காணும் விபரங்களையும், சான்றுப்பத்திரங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

1. முழுப் பெயரும் விலாசமும் :
2. வசிக்கும் இடம் :
3. வயதும் பிறந்த திகதியும் :
4. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ?
5. கல்வித் தகைமைகள் :
   தமிழ் :
   ஆங்கிலம் :
6. தற்போது வகிக்கும் பதவி அல்லது முன்பு வகித்த பதவிகள் :
7. சமீபத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு நற்சான்றிதழ்கள் (பிரதிகள்)

எம். ரி. டபிள்யூ. அமரசேகரா,
யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்.

1973 ஏப்பிரல் 4,
கச்சேரி, யாழ்ப்பாணம்.

4–417—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56

---

**திருக்கோணமலை மாவட்டத்தின் கொட்டியார் கிழக்குப் பகுதியில் பிறப்பு இறப்புப் பதிவாளருக்கும், கொட்டியார் பற்றுப் பகுதியின் (பொது) விவாகப் பதிவாளருக்குமான பதவி**

மேற்கூறப்பட்ட பதவிக்கு கொட்டியார் கிழக்குப் பிறப்பு, இறப்புப் பதிவுப் பகுதிக்குள் நிரந்தரமாக வசிக்கும் ஆண் பெண் இருபாலாரிடம் அல்லது அவ்விடத்தை வாசஸ்தலமாகக் கொண்டு அவ்விடம் குடியேறி, அப்பகுதிக்குள் போதிய நலனும் செல்வாக்குமுடைய நபர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் முடிவடையும் தினத்தன்று விண்ணப்பகாரர்கள் 21 வயதிற்குக் குறையாதவர்களாகவிருத்தல் வேண்டும். ஏற்கனவே, நிரந்தர அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பகாரர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு அமைவுறுது.

2. கல்வி, தகைமை சம்பந்தமான மேலதிக விபரங்களை இக்காரியாலயத்தில் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களிலிருந்து அல்லது அப்பகுதிக்குள் இருக்கும் பொது இடங்கள், அலுவலகங்கள், அதாவது பகுதி அரசிறை உத்தியோகத்தரின் அலுவலகம், கிராம சேவையாளரின் அலுவலகம், உள்ளூராட்சிச் சபையினரின் அலுவலகங்கள், கிராமக் கோடுகள், அஞ்சல் அலுவலகங்கள், பொலிசு நிலையங்கள், சனசமூக நிலையங்கள், பொதுச் சந்தைகள், கூட்டுறவுச் சங்கக் கடைகள் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. இவ்வலுகத்திலிருந்து பெறக்கூடிய விதித்த படிவத்தில் எல்லா விண்ணப்பங்களையும் தயாரித்து, 1973 ம் ஆடு மே (வைகாசி) மாதம் 24 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும்.

திஸ்ஸ தேவேந்திரா,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
திருக்கோணமலை,
1973 ம் ஆடு ஏப்ரல் (சித்திரை) மீ 9 ந் உ.

4–578—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56

---

**கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்**

உதவி கம்பனிப் பதிவாளர் பதவி

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் உதவிக் கம்பனிகள் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டிருக்கும் படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் செயலாளர், வெளிநாட்டு, உள்நாட்டு, வியாபார அமைச்சு, த. பெ. இல. 560, கொழும்பு 2 என்ற முகவரிக்கு பின்வரும் திகதிகளன்றோ அல்லது அதற்கு முன்னரோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும் :—

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள், 11 ஆம் திகதி மே, 1973 ;

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 18 ஆம் திகதி மே, 1973.

குறிப்பு.—(1) இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்தில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(2) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான கடைசித் திகதி வரை பொறுத்திருப்பவர்கள் அதனலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாளராவார்கள்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் விரும்பினுல் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்க, உள்நாட்டு, வெளிநாட்டு வியாபார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(4) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்—ஸ்ரீ லங்கா குடியரசின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல் நலம் உடையவர்களாக இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்யும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன விதிகளும், சேவை நிபந்தனைகளும்.**—பதவி நிரந்தரமானது. நன்கொடை அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதியத்திற்குக் கொடுத்தல் வேண்டும். நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமான பதவிகளை வகிக்கும் அபேட்சகர்களும் ஏற்கனவே அரச சேவையிலுள்ளவர்களும் தெரிவு செய்யப்பட்டால் ஓய்வூதிய உரிமைகளைத் தொடர்ந்து பெறுவர்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவியுடன் இணைக்கப்பட்டுள்ள திரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—ரூபா 6,720—360/12 உம் 480/7—14,400 வருடாந்தம். (ரூபா 7,800, ரூபா 11,520 யிற்கு முன் வினைத்திறமைகாண் தடைகளுண்டு).

குறிப்பு.—1.10.69 யிற்கு முன் அடிப்படை சம்பள அளவுத் திட்டம் வருடாந்தம் ரூபா 4,800—360/12 உம், 480/6—ரூபா 11,280. (ரூபா 5,160 ரூபா 8,880 பெறுமுன் வினைத்திறமைகாண் தடைகளுண்டு).

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர், அவரது தகைமையையும் அனுபவமும் சலுகை பெறுவதற்கு இடமளிக்குமிடத்து, தாபன அதிபதியின் ஒருப்பாடுடன் தகுந்த ஓரிடத்தில் வைக்கப்படுவார். ஏற்கனவே அரச சேவையிலுள்ள அபேட்சகர் தெரிவு செய்யப்பட்டால், அவரது சம்பளம் 13.6.1959 ஆம் ஆண்டின் 492 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபத்தினால் திருத்தப்பட்டபடியான 25.2.1957 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தினால் தீர்மானிக்கப்படும்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் அவர்/அவள் பின்வருவனவற்றிற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) சிறந்த நற்குணமும் உடல் நலமுமுடையவர் ;

(ஆ) 11.05.1973 ஆந் திகதியன்று 25 வயதிற்குக் குறையாதவராகவும் 40 வயதிற்கு மேற்படாதவராகவுமிருத்தல் வேண்டும். ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ள அபேட்சகர்களுக்கு இவ் வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது ;

(இ) விண்ணப்பதாரர்கள் சிவில் சட்டம், குற்றச் சட்டத்தில் 5 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்ற அட்வகேட் அல்லது புறொக்டராகவிருத்தல் வேண்டும். கம்பனிச் சட்டம், வியாபார உரிமை அடையாள வடிவமைப்புச் சட்டத்தில் செயல்முறை அனுபவமும் அறிவும் கொண்டவராயிருத்தல் வேண்டும். கணக்குப் பதிவியல், கணக்கீடு, சீட்டு, ஆக்கவுரிமை, சங்கங்கள், வியாபாரப் பெயர்கள், சட்டத்தில் செயல்முறை அனுபவமும் அறிவுமுடையவர்களாயிருப்பதுடன் சிங்களத்திலும் தமிழிலும் சிறந்த அறிவு பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும். பொது எழுதுநர் சேவையைச் சேர்ந்த

குறிப்பு.—மேற்றர வகுப்பு, I ஆம் வகுப்பு அல்லது II ஆம் வகுப்பு உத்தியோகத்தர்கள், விசேட தர உயர்ந்த தர அல்லது கீழ் தர சுருக்கெழுத்தாளர்கள், உயர்ந்த தர அல்லது பொதுத்தர தட்டெழுத்தாளர்கள், கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் குறைந்தது 5 வருடம் அனுபவமுள்ளவர்களும் புறொக்டர்கள் அல்லது அட்வகேட்களாகவுள்ள பட்டதாரிகளற்ற மொழிபெயர்ப்பாளர்களும், திணைக்களத்தில் 5 வருடம் சேவை புரிந்த கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தைச் சேர்ந்த பரிசோதகர்களும் அவர்களுக்குள்ள அனுபவத்தைப் பாராது நியமனத்திற்கு ஆலோசிக்கப்படுவார்கள்.

5. தேவைப்படும் பொழுது பின்வரும் சாதனங்களில் எல்லாவற்றையேனும் அல்லது எவற்றையேனும் அபேட்சகர்கள் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுவார்கள்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (குறிப்பு.—சமய தீட்சைச் சான்றிதழ், அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலையின் பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) கல்வி அதிபதி, கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்ற குணச் சான்றிதழ் உட்பட இரண்டு குணச் சான்றிதழ்கள்.

(ஈ) தொழிலும் தொழில் நுட்பமும் அல்லது தொழில் அல்லது தொழில் நுட்பச் சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலத்தில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) இவ்விண்ணப்பப் படிவத்துடன் சாதனங்களாயினும் சாதனங்களின் பிரதிகளாயினும் இணைக்கப்படக்கூடாது.

(2) தேவைப்படும் போது சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறிய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற்கெடுக்கப்படமாட்டா.

6. அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர் மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறு எந்தக் கடிதத் தொடர்புகளும், செயலாளர், வெளிநாட்டு, உள்நாட்டு வியாபார அமைச்சு, என முகவரியிடப்பட வேண்டுமேயன்றி, எந்த உத்தியோகத்தருக்கும் நேரிடையாக அனுப்புதல் கூடாது.

8. இவ்வர்த்தமானியின் பகுதி I பிரிவு (II அ) யின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரச சேவையிலுள்ள பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளைப் பார்க்கும் படி கேட்கப்படுகிறார்கள்.

9. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும். முடிவுத் திகதியிலிருந்து 3 வாரகாலத்திற்குள் கிடைத்தமை பற்றின அறிவித்தலைக் கிடைக்கப் பெறுவிட்டால், அது உடனடியாக எனது கவனத்திற்குக் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

ஜே. பி. கெலேகம,
செயலாளர்,
வெளிநாட்டு, உள்நாட்டு வியாபார அமைச்சு.

வெளிநாட்டு, உள்நாட்டு வியாபார அமைச்சு,
த. பெ. 560,
330, யூனியன் இடம்,
கொழும்பு 2,
1973 ம் ஆண்டு ஏப்ரில் மீ 4 ந உ.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

(சாதனங்களையோ சாதனங்களின் படிகளையோ விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் ஆகாது)

**கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்**

உதவிக் கம்பனிகள் பதிவாளருக்கான பதவி

1. முழுப்பெயர் : ————.
(தெளிவான எழுத்துக்களில்)

2. அஞ்சல் முகவரி : ————.
(அஞ்சல் முகவரியில் மாற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்கப்படுதல் வேண்டும்)

3. (அ) பிறந்த திகதி :—
வருடம் : ————, மாதம் : ————, திகதி : ————.
(ஆ) உள்ளூர் விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியன்று சரியான வயது :————.

4. நீர் இலங்கைப் பிரசையா ? வம்சாவழி அல்லது பதிவுப் பிரசையா ? அப்படியில்லையாயின் பதிவுப் பிரசையென்று குறிப்பிடுக : ————.
(இலங்கைப் பதிவுப் பிரசையானல் பத்திரத் தொடர்பு இலக்கமும் திகதியும் குறிப்பிடுக)

5. பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பகாரர் : ————.
(ஆ) விண்ணப்பகாரரின் தந்தை : ————.
(இ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப்பாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பூட்டன் : ————.

குறிப்பு.—விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (ஆ) அல்லது (இ), (ஈ) இரண்டும் (அ) வுடன் சேர்த்து நிரப்பப்படுதல் வேண்டும்.

6. (அ) ஆணா ? பெண்ணா ? : ————.
(ஆ) விவாகமானவர், தனிப்பட்டவர், விதவை, தாரமிழந்தவர் ————.

7. (1) சிங்களம் (2) தமிழ் (3) ஆங்கிலம் இவற்றில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை : ————.

8. 12 ஆம் வயதிலிருந்து படித்த பாடசாலைகள், கல்லூரிகள், வேறு கல்வித் தாபனங்கள் : ————.

| பொதுக் கல்வி பாடசாலை அல்லது கல்லூரி தொட்டு முடிய | உத்தியோகக் கல்வி கல்வித்தாபனம் தொட்டு முடிய |
|---|---|
| 1. .................... | 1. .................... |
| 2. .................... | 2. .................... |

9. விளையாட்டில் பெற்ற திறமை விபரங்கள், இந்தத் துறையில் நீர் வகித்த பொறுப்பான பதவி : ————.

10. நீர் கடன் தொல்லைகள் இல்லாதவரா ? கடன் பொறுப்புகள் இருக்கு பட்சத்தில் கடன் பொறுப்புகளின் அளவுகள் என்ன ? : ————.

11. சட்ட நீதிமன்றங்களில் ஏதாவது குற்ற பாதகத்திற்குக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறீரா ? அப்படியானால் வழக்கு இலக்கத்தை எடுத்துக் காட்டி திகதிகளோடு முழு விபரங்களையும் குறிப்பிடுக : ————

12. பாடசாலைக் கல்வி, உத்தியோகக் கல்வித் தகைமைகள் :————.

(பல்கலைக் கழகத்து சகல பட்டங்கள், திறமைகள், உத்தியோகக் கல்வித் தகைமைகள் முதலியவற்றின் விபரங்களைத் திகதி, சித்தி தரம் இருந்தால் அவை எடுத்த பாடங்கள், கல்வித் தாபனப் பெயர்கள் இவற்றுடன் தருக)

13. இப்போதய தொழிலும் முன்னர் ஏதேனும் பதவியிலிருந்திருந்தால், அப்பதவிகளும், (பதவி ஏற்றுக் கொண்ட திகதியும், விட்டு விலகிய திகதியும், கடைசியாகப் பெற்ற ஆண்டுச் சம்பளமும் குறிப்பிடப்படல் வேண்டும்) : ————.

| பதவி | தொட்டு முடிய | ஆண்டுச் சம்பளம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

முக்கியம்.—அரசாங்கம் உத்தியோகத்திலிருந்து நீக்கிய காரணம் கீழேயுள்ள 15 ஆம் நிரல் பிரிவில் குறிப்பிடப்படல் வேண்டும்.

14. விசேட தகைமைகள்.—அறிவித்தலில் குறித்துக் காட்டிய விசேட தகைமைகள் அல்லது அனுபவம் உடையவரா ? அப்படியானால் அவற்றின் முழு விபரங்களைத் திகதிகளுடன் தருக. அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் ஏதாவது விசேட தேவைகள் குறித்துக் காட்டப்பட்டிருந்தால் பார்க்குக : ————.

15. மேலும் வேறு விபரங்கள் : ————.

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, சரியற்றவை என்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்றும் நியமனம் பெற்ற பிற்பாடு சரியற்றவையென்று கண்டுபிடிக்கப்பட்டால் நட்ட ஈடு எதுவுமின்றிப் பதவியால் நீக்கப்படுவேன் என்றும் நான் அறிந்திருக்கிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————

(விண்ணப்பகாரர் அரசாங்க சேவையில் இருப்பவரெனின் அப்பகுதித் தலைவரின் அறிக்கை)

————.
திணைக்கள/அமைச்சு தலைவரின் கையொப்பம்.

திகதி : ————.

4-516—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56

---

**கல்வி அமைச்சு**

கட்புல—செவிப்புல பிரிவிலுள்ள கனிட்ட தொழில்நுட்ப உதவியாளர் பதவி

கல்வி அமைச்சிலுள்ள கட்புல—செவிப்புல பிரிவில் கனிட்ட தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்குக் கீழ்க்காணும் தகைமைகளைப் பெற்றுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறைக்கமையத் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் 1973 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக " செயலாளர் (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(i) இப்பதவிகள் நிரந்தரமானவை. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் உபகாரச் சம்பள உரித்துடைய பதவிகளை ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் வகிக்காவிடின் அ. சே. சே. நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நியமனத்தின்போது அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் உபகாரச் சம்பள உரித்துடைய பதவி ஒன்றினை வகிப்பின் உபகாரச் சம்பள உரித்தை அவர் தொடர்ந்து அனுபவிப்பர். தெரிவு செய்யப்படும் அபேட்சகர், ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாவிடின், முதற்கண் மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவர். நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவி ஒன்றினை அரசாங்கத்தின் கீழ் வகிக்கும் ஒருவர் தெரிவு செய்யப்படின் ஒரு வருட காலத்துக்கு அவர் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்.

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் ரூபா 5,000 க்குப் பின்வரும் முறையில் பிணை செலுத்த வேண்டும். தேசிய சேமிப்பு வங்கியில் ரூபா 2,000 கட்டப்பட வேண்டும்—நியமிக்கப்பட்டதும் ரூபா 200உம் மிகுதி மாதாந்தம் ரூபா 10 தவணைகளாக. இத்துடன் ரூபா 3,000 க்கு உத்தவரவாத முறியும்.

3. **சம்பளமும் சகாயப்படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பளம் பின்வருமாறுகும் :—

ரூபா 3,864—18×144—ரூபா 6,456. ரூபா 5,304 பெறுமுன் வினைத் திறமைகாண் தடை ஒன்றுண்டு.

குறிப்பு.—1.10.69 க்கு முன்னரான இதற்கொத்த சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறுகும் :—

ரூபா 1,620—120—ரூபா 3,780. ரூபா 2,820 பெறுமுன் வினைத் திறமைகாண் தடை.

4. **தேவைப்படும் தகைமைகள்.—விண்ணப்பதாரிகள்—**

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்பட்டவராயும் இருக்கலாகாது (அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை அமையாது).

(ii) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(iii) இரசாயனவியல், பௌதிகவியல், கணிதம் (தூய அல்லது பிரயோக) உட்பட ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பத்திரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி அல்லது இரசாயனவியல், பௌதிகவியல், கணிதம் (தூய அல்லது பிரயோக) ஆகிய பாடங்களுடன் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(iv) வானொலி இயந்திரங்கள், நாடாப் பதிவிலிகள், இசைத்தட்டு மீள் கருவிகள், ஒலி கூடிய சலனப் பட வீழ்த்திகள் ஆகியவற்றைக் கையாளுதல், பேணுதல், பழுதுபார்த்தல் ஆகியவற்றில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(v) மின்சார/இலத்திரனியல் உபகரணங்களைப் பழுதுபார்த்தலில் உபயோகிக்கப்படும் வெவ்வேறு வகை பரீட்சிக்கும் உபகரணங்கள் பற்றிய சிறந்த அறிவு.

**மேலதிக தகைமைகள் :**

பின்வருவன போன்ற மேலதிக தகைமைகளைப் பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வடங்கப்படும் :—

(i) உலோக வேலையில் செயல்முறை அனுபவம்.

(ii) பல்வேறு வகைப்பட்ட ஒளிப்படம் எடுக்கும் கருவிகளின் உபயோகம், சாதனங்களின் ஒளிப்படிகள் எடுத்தல், ஒளிப்படங்களைப் பெருப்பித்தலுடன் சம்பந்தப்பட்ட இருட்டறை முறைகள்.

(iii) சலனப் படங்களைப் பேணல், வைத்திருத்தல், விநியோகித்தல் ஆகியவற்றில் அறிவும் அனுபவமும்.

(iv) கல்வி அமைச்சின் கீழுள்ள அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்ப நிலையத்தால் வானொலி இயந்திரம் பழுதுபார்த்தலில் வழங்கப்படும் சான்றிதழ்.

5. விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் சாதனங்களில் ஒன்றை அல்லது கூடியவற்றை, வேண்டப்படும் நேரத்தில் சமர்ப்பிக்க ஆயத்தமாய் இருக்க வேண்டும் :—

(அ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திரம்.

(ஆ) 4 (iv) ஆம், (v) ஆம் உப பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரப் பத்திரம்.

(இ) சிங்களத்தில் சித்தி எய்தியுள்ள ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம்.

(ஈ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்.

குறிப்பு.—(1) சாதனங்களேனும் சாதனங்களின் பிரதிகளேனும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படலாகா.

(2) வேண்டப்படும் நேரத்தில் சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறுவோரின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படமாட்டா.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைத் தத்தம் திணைக்கள/நிலையத் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் அத்தகைய விண்ணப்பங்கள் விதிக்கப்பட்ட திகதிக்கு முன் உரிய திணைக்கள/நிலையத் தலைவரால் பெறப்பட்டு தாமதத்துக்கான போதிய காரணம் காட்டி அவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தலைவரால் சிபார்சு செய்யப்பட்டாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. இவ்வர்த்தமானியில் I ம் பகுதி, (IIஅ) ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையும் அரசினர் சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்கு உங்கள் கவனம் கோரப்படுகின்றது.

8. விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுதற்கான கடைசித் திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றிய அறிவித்தலைப் பெறத் தவறும் விண்ணப்பதாரி ஒருவர் அதனைக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

தொடர்பெண் : பெ. நி. 20/240,
பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1973 ம் ஆண்டு ஏப்பிரில் மீ 19 ந உ.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

கட்புல—செவிப்புல பிரிவிலுள்ள கனிட்ட தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் (தெளிவாக) :————.

2. நிரந்தர தபால் விலாசம் :————.

3. சொந்த இடம் :————.

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று உள்ளபடி சரியான வயது :———.
பிறந்த திகதி :————.

5. பின்வருவோர் பிறந்த இடம்—
(அ) விண்ணப்பதாரி :————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் :————.

6. வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா இலங்கையர் :———.

7. கல்வித் தகைமைகள் :—
(1) பொது :————.
(2) உயர்தொழில் தகைமைகளும் தொழில்நுட்பத் தகைமைகளும் அல்லது இவைகளில் யாதேனும் பற்றிய விபரங்கள் :————
(3) சிங்களத்தில்/தமிழில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை பற்றிய விபரங்கள் :————.

8. 4 ஆம் பந்தியின் (iv) ஆம், (v) ஆம் உப–பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள சேவை பற்றிய விபரங்கள் :—

| பதவி | சேவை புரிந்த நிலையம் | சேவை புரிந்த காலம் |
|---|---|---|
| | | |

9. விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? :————

10. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின்—
(அ) தீர்ப்பு அளிக்கப்பட்ட திகதி :————.
(ஆ) வழக்கு எண் :————.
(இ) குற்றத்தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் குறிப்பிடுக :———.

11. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின் எவ்வளவுக்கு :————.

12. உமக்கு எதிராக யாதேனும் ஒழுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? எடுக்கப்பட்டிருப்பின் அது பற்றிய விபரங்கள் :————.

13. முன்னர் யாதேனும் படையில் சேவை புரிந்து விலகியவராயின்—
(அ) படைக்கூற்றின் பெயர் :————.
(ஆ) வகித்த பதவி :————.
(இ) சேர்ந்த, விலக்கப்பட்ட திகதிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக : ————

14. பாடசாலையிலிருந்து விலகிய காலம் தொடக்கம் புரிந்த உத்தியோகம் பற்றிய விபரங்கள் :—
(அ) வகித்த பதவிகள் :————.
(ஆ) சேவை புரிந்த காலம் :————.
(இ) விலகியதற்கான காரணம் :————.

15. அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு ஸ்தல ஆட்சிச் சபையின் கீழ் முன்னர் கடமை புரிந்திருப்பின் நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்தகைய உத்தியோகம், (ஆ) சேர்ந்த விலகிய திகதிகள், (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் :————.

16. தற்போது வகிக்கும் உத்தியோக விபரங்கள் :————.
(1) நிலையத்தின் பெயர் :————.
(2) பதவியும் அதன் தரமும் :————.
(3) இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :————.
(4) நியமனம் உபகாரச் சம்பள உரித்துடையதா/தற்காலிகமானதா/சமயோசிதமா :————.
(5) சகாயப்படிகள் நீங்கலாகத் தற்போதைய சம்பளமும் சம்பள விகிதமும் :————.
(6) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி :————.

17. வேறு யாதேனும் விபரங்கள் :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்பட்டதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

### பகுதி/நிலையத் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்

உங்கள் எண். பொ. நி. 20/240
எமது எண் :

செயலாளர்,
கல்வி அமைச்சு,

விண்ணப்பம், விண்ணப்பங்கள் முடிவடைதற்கான திகதியின் முன்/பின் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

............ இலக்கப் பந்திகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவை/பின்வரும் திருத்தங்கள் உட்படச் சரியானவை*. விண்ணப்பம் இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றன.

————,
பகுதி/நிலையத் தலைவரின் கையொப்பம்.

திகதி :————.

*பொருத்தமற்றவற்றைக் கீறிவிடுக.

4–545—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை பரீட்சைத் திணைக்களம்

### கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண)ப் பரீட்சை பயிற்சிச் சிங்களம்/தமிழ்

க. பொ. த. ப. (சா. த.) பரீட்சையின் அங்கீகரிக்கப்பட்ட பாடங்களின் நிரலிலிருந்து பயிற்சிச் சிங்களமும் பயிற்சித் தமிழும் நீக்கப்பட்டுள்ளன என்று எல்லாப் பாடசாலைத் தலைவர்களும் பரீட்சார்த்திகளும் அறிவிக்கப்படுகிறார்கள். அவற்றுக்குப் பதிலாக, பரீட்சார்த்திகள் சிங்கள மொழி (விருப்பமான) அல்லது தமிழ்மொழி (விருப்பமான)யை எடுக்கலாம்; புதியதொரு வகையில் திருத்தியமைக்கப்பட்ட இவற்றின் பாடத்திட்டம் 1973 பரீட்சை முதல் நடைமுறைக்கு வரும். புதிய பாடத்திட்டம் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்; அவை இவ்விரண்டு பாடங்கள் சார்பான முன்னைய பாடத் திட்டத்திலிருந்தும் சிறிதளவே மாறுபட்டிருக்கும்.

போகொட பிரேமரத்தின,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி, கொழும்பு-2,
1973, ஏப்ரல் மாதம் 5 ஆந் திகதி.

4-542—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56

---

இல.1/83/30(ஜீ)

### அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையின் சாதாரண தரத்திலுள்ள சுருக்கெழுத்தாளர்களுக்காய இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை (ஆங்கிலம்)—1972 நொவெம்பர் 18 ந் தேதி

1966 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் தேதிய ஜீ. 134 ஆம் இலக்கத்தைக் கொண்ட திறைசேரிச் சுற்றுநிருபம், 1968 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7 ஆந் தேதிய ஜீ. 170 ஆம் இலக்கத்தைக் கொண்ட திறைசேரிச் சுற்றுநிருபம் என்பவற்றில் குறிக்கப்பட்டுள்ள திட்டத்தின் நியதிகளுக்கிணங்க, ஆண்டொன்றுக்கு ரூபா 5,736 திரட்டிய வேதனத்திற்கு முன்னருள்ள இரண்டாம் வினைத்திறமைகாண் தடைக்கு மேலாக உயர்ச்சியளிக்கப்படுவதற்காக 1972, நொவெம்பர் 18 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட தகைமைத் தேர்வில், அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையின் சாதாரண தரத்திலுள்ள கீழ்க் குறிப்பிட்டுள்ள சுருக்கெழுத்தாளர்கள், அவர்களின் பெயர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்திற் சித்தியடைந்துள்ளனரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பெயர் | திணைக்களம் | பாடம் |
|---|---|---|
| கருணசேன வி. | மாவட்டநீதிமன்றம், பலப்பிட்டி | சுருக்கெழுத்து தட்டெழுத்து |
| சண்முகநாதன் ரி. | பொலிஸ் காரியாலயம், மட்டக்களப்பு | சுருக்கெழுத்து தட்டெழுத்து. |

2. மாநாட்டுத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவதற்கு இப்பொழுது தகைமையடைந்துள்ள மேற்படி பரீட்சார்த்தியும், முன்னர் தகைமையடைந்துள்ள ஏனையோரும், அடுத்த மாநாட்டுத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவதற்காக, தமது திணைக்களத் தலைவர் மூலம் பரீட்சை ஆணையாளருக்கு உடனடியாகப் பதிவு அஞ்சலில் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஆர். எம். பி. சேனநாயக்க,
அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதிக்காக.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
(இணைந்த சேவைகள் பகுதி)
ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு—7.
1973, ஏப்பிரல், 10.

4-556/1—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56

---

எனது இல: 1/83/30 (ஜீ)
அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
(இணைந்த சேவைகள் பகுதி)
ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு-7.
1973, ஏப்பிரல் 10.

### இந்த அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையின் சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/தமிழ்) முதலாம் இரண்டாம் வினைத்திறமை காண் தடைப் பரீட்சைகள்—நொவெம்பர்—1972

1972, நொவெம்பரில் நடாத்தப்பட்ட மேற்படி பரீட்சைகளில் ஒருவரும் சித்தியடையவில்லை யென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆர். எம். பி. சேனநாயக்க,
அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதிக்காக.

4-556/2—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப் படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசக்ங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500. சையலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | 6.4.73 | வெள்ளி | 28.3.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 11.4.73 | புதன் | 4.4.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 19.4.73 | வியாழன் | 11.4.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 27.4.73 | வெள்ளி | 18.4.73 | புதன் | ந.ப. 12.00 |
| **மே** | 4.5.73 | வெள்ளி | 25.4.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 11.5.73 | வெள்ளி | 2.5.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 18.5.73 | வெள்ளி | 9.5.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 25.5.73 | வெள்ளி | 15.5.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| **யூன்** | 1.6.73 | வெள்ளி | 23.5.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 8.6.73 | வெள்ளி | 30.5.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.6.73 | வியாழன் | 6.6.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 22.6.73 | வெள்ளி | 13.6.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 29.6.73 | வெள்ளி | 20.7.73 | புதன் | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆடு ஒகத்து மீ 18 ந உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.